*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **26 ஜனவரி 2023**

## <u>பத்திரிகை செய்தி</u>

நாட்டின் 74-வது குடியரசு தினத்தை முன்னிட்டு மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் புதுச்சேரி கடற்கரை, காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தேசியக்கொடி ஏற்றி வைத்தார.

விழாவில் கலந்து கொள்ள தெலுங்கானாவில் இருந்து விமானம் மூலம் புதுச்சேரி வந்த துணைநிலை ஆளுநர், மோசமான பருவநிலை காரணமாக விமானம் தரையிறங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக விழாவிற்கு சற்று காலதாமதமாக வந்து சேர்ந்தார்.

விழாவில் பல்வேறு காவல்துறை படைப்பிரிவினர், மாணவ-மாணவிகள் அணிவகுப்பு, கலை நிகழ்ச்சிகள், அலங்கார ஊர்திகள் ஆகியவை இடம் பெற்றன.

விழாவில், சிறப்பான சேவை புரிந்தவர்களுக்கு துணைநிலை ஆளுநர் பதக்கங்கள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடையங்கள் வழங்கி சிறப்பித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர், அரசு செயலர்கள், காவல்துறை அதிகாரிகள், அரசுத்துறை உயர் அதிகாரிகள், பொதுமக்கள் விழாவில் கலந்து கொண்டனர்